## இயல் 6.1 - எண்கள்

பயிற்சி எண் :: 6.1.7.6.L

எண்கள் - மீ.பெ.கா (HCF) - தினவாழ்க்கைச் சிக்கல்கள் II

## எண்கள் - மீ.பெ.கா (HCF) - தினவாழ்க்கைச் சிக்கல்கள் II

அதியமானுடைய தோட்டத்தில் அல்ஃபோன்ஸா, செந்தூரம், பங்கனப்பள்ளி, ருமானி ஆகிய 4 விதமான மாமரங்கள் உள்ளன. அவை கடந்த கோடையில், முறையே 630,1170,2550 மற்றும் 4290 பழங்கள் கொடுத்தன. அவர், எல்லாவித மாங்கனிகளுக்கும் ஒரே கொள்ளளவுடைய அட்டைப்பெட்டியை வாங்கி, அதில் பழங்களை வைத்து விற்பனைக்கு அனுப்ப உத்தேசித்தார். அவ்வாறெனில், ஒவ்வொரு பெட்டியிலும் அடைத்த பழங்களின் எண்ணிக்கை என்ன? மொத்தம் எத்தனை அட்டைப்பெட்டிகள் தேவைப்பட்டிருக்கும்?

மாம்பழவகைகளின் எண்ணிக்கை = 630, 1170, 2550 மற்றும் 4290

இந்த எண்ணிக்கைகளுக்கு இடையே உள்ள மீ.பெ.கா-வை கண்டு பிடித்தால் ஒரு பெட்டியில் வைக்க வேண்டிய மாம்பழங்களின் எண்ணிக்கை நமக்குக் கிடைத்துவிடும். =

$$\textcircled{2} \times \textcircled{3} \times 3 \times \textcircled{5} \times 7 = 630$$

$$\textcircled{2} \times \textcircled{3} \times 3 \times \textcircled{5} \times 13 = 1170$$

$$\textcircled{2} \times \textcircled{3} \times \textcircled{5} \times 5 \times 17 = 2550$$

$$\textcircled{2} \times \textcircled{3} \times \textcircled{5} \times 11 \times 13 = 4290$$

மீ.பெ.கா$(630,1170,2550,4290) = 2 \times 3 \times 5 = 30$

ஒரு அட்டைப்பெட்டியில் வைக்க வேண்டிய மாம்பழங்களின் எண்ணிக்கை $= (2 \times 3 \times 5) =$ **30** ஆகும்.

---

அந்த வருடம் அதியமான் விற்பனை செய்த மாம்பழம் அடங்கிய பெட்டிகளின் எண்ணிக்கை $= (3 \times 7) + (3 \times 13) + (5 \times 17) + (11 \times 13) = 21 + 39 + 85 + 143 =$ **288**

Sum & solution prepared on Wednesday 27th October, 2021 :: 10:52 Hrs.

All rights related to content above such as problem creation, solution, voice over, Video creation are reserved to
V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, CBE - 641 046, INDIA. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.